(ஒன்பதாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

**இல. 69.]**

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

### 2021 ஏப்ரல் 20, செவ்வாய்க்கிழமை, மு.ப. 10.00 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1.

36/2020

கௌரவ ஹேஷா விதானகே,— வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2015 முதல் 2019 வரையிலான ஆண்டுகளில் —

(i) இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட அரிசியின் அளவு;

(ii) அதற்காக செலவிடப்பட்ட மொத்தத் தொகை;

(iii) இறக்குமதியின்போது ஒரு கிலோ அரிசிக்காக அறவிடப்பட்ட வரித்தொகை;

(iv) அரிசி இறக்குமதிக்காக அறவீடு செய்த மொத்த வரித் தொகை;

எவ்வளவு என்பதை வருடாந்த அடிப்படையில் தனித்தனியாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்குறிப்பிட்ட ஆண்டுகளில் அரிசியின் விலைத் தளம்பல் எந்த வகையில் இடம்பெற்றதென்பதனை ஆண்டுகளின் அடிப்படையில் தனித்தனியாக முழுமையான அறிக்கையொன்றினை அவர் இச்சபைக்கு சமர்ப்பிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2.

203/2020

கௌரவ சமிந்த விஜேசிறி,— இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் புதிய பணிப்பாளர்கள் சபை உறுப்பினர்களின் பெயர், விலாசம், கல்வித் தகைமைகள் மற்றும் தொழில்வாண்மைத் தகைமைகள் ஆகியன தனித்தனியாக யாவையென்பதையும்;

(ii) இளைஞர்களின் அபிவிருத்தி தொடர்பாக அமைச்சின் தொலைநோக்கு யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3.

356/2020

கௌரவ புத்திக பத்திறண,— சுற்றாடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மாத்தறை நில்வளா கங்கையில் கழிவுகள் அகற்றப்படுவதன் காரணமாக இந்த கங்கை மாசடைந்துள்ளது என்பதையும்;

(ii) மாத்தறை மாவட்டத்திலுள்ள மக்களின் சுகாதார நிலைக்கு இது பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது என்பதையும்;

(iii) நீரின் தரத்தை பாதுகாத்துக்கொள்வதற்கு நில்வளா கங்கையின் இருமருங்கும் ஒதுக்கிடமாக பிரகடனப்படுத்தப்பட வேண்டும் என்பதையும்;

அவர் ஏற்றுக் கொள்வாரா?

(ஆ) (i) நில்வளா கங்கையின் இருமருங்கிலும் 33 அடிகளிலான ஒதுக்கிடமொன்றைத் தாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமாவென்பதையும்;

(ii) ஆமெனில், அத்திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) 2016 ஆம் ஆண்டில் நில்வளா கங்கையில் கழிவுகளை கொட்டியதன் காரணமாக ஆட்கள் கைது செய்யப்பட்டுள்ளார்களா என்பதையும்;

(ii) ஆமெனில், அத்தகைய ஆட்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

4.

458/2020

கௌரவ இஷாக் ரஹுமான்,— நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) அனுராதபுரத்திலிருந்து குருநாகல் நகருக்கு செல்லக் கூடிய குறுகிய வழி புல்னேவ - பொல்பிதிகம பாதை என்பதையும்;

(ii) அப்பாதையானது தலாவை சந்தியிலிருந்து பொல்பிதிகம சந்தி வரையிலான பகுதி தற்போது சேதமடைந்த நிலையில் உள்ளதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) பாதையின் மேற்படி பகுதியை அபிவிருத்தி செய்வதற்கு எதிர்பார்க்கப் படுகின்றதா என்பதையும்;

(ii) ஆமெனில், அதற்கென மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி அபிவிருத்தி நடவடிக்கைள் ஆரம்பிக்கப்படும் திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

5.

462/2020

கௌரவ மொஹொமட் முசம்மில், — சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) டாக்டர் நெவில் பர்னாந்து அரச போதனா வைத்தியசாலை அரசாங்கத்திற்குப் பொறுப்பேற்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(ii) மேற்படி பொறுப்பேற்றலுக்கு அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்திருந்ததா என்பதையும்;

(iii) ஆமெனில், அத்தேதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி வைத்தியசாலையின் ஒட்டுமொத்த பணியாளர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி வைத்தியசாலையில் பணியாற்றுகின்ற தாதிமாருக்கு 2017 அக்டோபர் முதல் 2020 டிசம்பர் வரையில் செலுத்தப்பட்ட சம்பளத்தின் மொத்தம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) அரசாங்கத்தினால் மேற்படி வைத்தியசாலைக்கு மருந்து வழங்கப்படுகின்றதா என்பதையும்;

(ii) ஆமெனில், 2017 செப்டெம்பர் முதல் இற்றைவரை மேற்படி மருந்துகளை வழங்குவதற்கு செலவிடப்பட்டுள்ள பணத்தொகை எவ்வளவென்பதையும்;

அவர் மேலும் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

6.

539/2020

கௌரவ ரோஹன பண்டார,— வனசீவராசிகள் மற்றும் வனப் பாதுகாப்பு அமைச்சரிடம் கேட்பதற்கு,— (1)

(அ) (i) காட்டு யானைகளின் அச்சுறுத்தலுக்கு முகம் கொடுத்துள்ள அனுராதபுரம் மாவட்டத்தில் அமைந்துள்ள கிராமங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) 2015 ஆம் ஆண்டு முதல் இற்றைவரை யானை - மனித மோதல் காரணமாக மரணமடைந்த ஆட்களின் எண்ணிக்கை மற்றும் சொத்துக்களுக்கு ஏற்பட்ட சேதங்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) அனுராதபுரம் மாவட்டத்தில் நிலவுகின்ற யானை - மனித மோதலுக்கு நிரந்தரமான தீர்வொன்றை வழங்குவதற்கு அமைச்சினால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாதென்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

7.

620/2020

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மருத்துவப் பட்டங்களை வழங்கும் சில சர்வதேச பல்கலைக்கழகங்களை கறுப்புப் பட்டியலில் சேர்ப்பதற்கு இலங்கை மருத்துவச் சபை தீர்மானித்துள்ளதா;

(ii) ஆமெனில், மேற்படி பல்கலைக்கழகங்களின் பெயர்கள் யாவை;

(iii) அவ்வாறான தீர்மானமொன்றை மேற்கொள்வதற்கு ஏதுவான காரணங்கள் யாவை;

என்பதை அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 2010 ஆம் ஆண்டு தொடக்கம் மேற்குறிப்பிட்ட (அ) (ii) இல் குறிப்பிடப்பட்டுள்ள பல்கலைக்கழகங்களிலிருந்து பட்டம் பெற்ற இலங்கை மாணவர்களின் எண்ணிக்கை ஒவ்வொரு ஆண்டுக்கமைய வெவ்வேறாக எத்தனை;

(ii) மேற்படி பல்கலைக்கழகங்கள் தொடர்பாக அமைச்சு மேற்கொள்ளவுள்ள அடுத்தகட்ட நடவடிக்கைகள் யாவை;

என்பதையும் அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

8.

717/2020

கௌரவ சாந்த பண்டார,— இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) விளையாட்டு வீரர்களை சேர்மத்தில் உள்ளடக்கி பயிற்சி வழங்குவதன் மூலம் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுக்கொள்ள முடியும் என்பதனை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) அமைச்சின் அனுசரணையின் கீழ் தற்போது பேணிச் செல்லப்படும் விளையாட்டுச் சேர்மங்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) எந்தெந்த விளையாட்டுகளுக்காக மேற்படி சேர்மங்கள் பேணப்பட்டு வருகின்றன என்பதையும்;

(iii) தடகள விளையாட்டுக்கான தேசிய சேர்மம் பேணப்பட்டு வரும் இடம் யாதென்பதையும்;

(iv) மேற்படி சேர்மத்தில் தற்போது பயிற்சி பெற்றுவரும் விளையாட்டு வீர வீராங்கனைகளின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(v) அந்த விளையாட்டு வீர வீராங்கனைகளுக்கு போதுமானளவு வசதிகள் வழங்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(vi) இன்றேல், ஏன் என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

9.

753/2020

கௌரவ சாணக்கியன் ராஜபுத்திரன் இராசமாணிக்கம்,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கொழும்பிலிருந்து பொலன்னறுவை வரை போக்குவரத்தில் ஈடுபடுத்தப்பட்டுள்ள புகையிரதம், மட்டக்களப்பு வரை ஈடுபடுத்தப்படாமைக்கான காரணம் யாதென்பதையும்;

(ii) மட்டக்களப்பு மாவட்டத்தில் அமைந்துள்ள புகையிரதப் பாதைகள் புனரமைக்கப்படும் திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

10.

763/2020

கௌரவ அமரகீர்த்தி அதுகோரள,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) பொலன்னறுவை மாவட்டத்திற்குரிய —

(i) கல்விக் கோட்டங்களின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் பெயர்கள் யாவை;

(ii) தேசிய பாடசாலைகளின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் பெயர்கள் யாவை;

(iii) மாகாணப் பாடசாலைகளின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் பெயர்கள் யாவை;

(iv) மேற்படி பாடசாலைகளில் தற்போது காணப்படும் ஆசிரியர் பற்றாக்குறை எவ்வளவு;

(v) கடந்த 5 ஆண்டுகளில் மூடப்பட்டுள்ள பாடசாலைகளின் எண்ணிக்கை யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) பொலன்னறுவை மாவட்டத்திற்குரிய பாடசாலைகளில் —

(i) க.பொ.த (உ/தர) வகுப்புகளுக்கு ஏற்புடையதாக அமைகின்ற நான்கு பாடத் துறைகள், மூன்று பாடத் துறைகள், இரண்டு பாடத் துறைகள் மற்றும் ஒரு பாடத்துறை மாத்திரம்;

(ii) க.பொ.த (சா/தர) பரீட்சை வரை;

(iii) ஐந்தாம் தரம் வரை;

கற்பிக்கப்படும் பாடசாலைகளின் எண்ணிக்கை கல்விக் கோட்டங்களுக்கு அமைவாக தனித்தனியாக யாதென்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) பொலன்னறுவை மாவட்டத்திற்குரிய பாடசாலைகளில் கடமையில் ஈடுபட்டுள்ள மொத்த ஆசிரியர்கள், பட்டதாரி ஆசிரியர்கள், பயிற்றப்பட்ட ஆசிரியர்கள், கல்வியியற் கல்லூரி ஆசிரியர்கள் மற்றும் ஏனைய ஆசிரியர்களின் எண்ணிக்கை தனித்தனியாக யாதென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

---

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## **பிரேரணை முன்னறிவித்தல்கள்**

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அலுவல்கள்,— ஒழுங்குப் பத்திரத்தில் காணப்படும் பொது அலுவல்களில் 1 முதல் 8 ஆம் இலக்கங்கள் வரையான பிரேரணைகள் மீதான நடவடிக்கைகள் இன்றைய அமர்வில் பாராளுமன்ற நிலையியற் கட்டளை 27 இன் ஏற்பாடுகளிலிருந்து விலக்குப்பெறுமாக.

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

* 1.

பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர்,— அந்நியச் செலவாணி சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 1),— 2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, அந்நியச் செலவாணி சட்டத்தின் 7 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 29 ஆம் பிரிவின் கீழ் நிதி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2021 பெப்ரவரி 03 ஆம் திகதிய 2213/34 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2021.04.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 2.

பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர்,— அந்நியச் செலவாணி சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 2),— 2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, அந்நியச் செலவாணி சட்டத்தின் 7 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 29 ஆம் பிரிவின் கீழ் நிதி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2021 பெப்ரவரி 03 ஆம் திகதிய 2213/35 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2021.04.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 3.

பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர்,— அந்நியச் செலவாணி சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 3),— 2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, அந்நியச் செலவாணி சட்டத்தின் 7 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 29 ஆம் பிரிவின் கீழ் நிதி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2021 பெப்ரவரி 03 ஆம் திகதிய 2213/36 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2021.04.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 4.

பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர்,— அந்நியச் செலவாணி சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 4),— 2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, அந்நியச் செலவாணி சட்டத்தின் 7 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 29 ஆம் பிரிவின் கீழ் நிதி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2021 பெப்ரவரி 03 ஆம் திகதிய 2213/37 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2021.04.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 5.

பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர்,— அந்நியச் செலவாணி சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 5),— 2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, அந்நியச் செலவாணி சட்டத்தின் 5, 7 மற்றும் 8 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 29 ஆம் பிரிவின் கீழ் நிதி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2021 பெப்ரவரி 03 ஆம் திகதிய 2213/38 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2021.04.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 6.

பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர்,— மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல் (இல. 1),— திருத்தப்பட்டவாறான (52 ஆம் அத்தியாயமான) மதுவரிக் கட்டளைச் சட்டத்தின், 8 மற்றும் 30 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அதே சட்டத்தின் 32 ஆம் பிரிவின் கீழ் ஒட்டுத்துண்டு மற்றும் ஒட்டுத்துண்டு முகாமை முறைமை தொடர்பில் நிதி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2021 சனவரி 01 ஆந் திகதிய 2208/34 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2021.04.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான அறிவித்தல் அங்கீகரிக்கப்படுமாக.

(மதுவரி அறிவித்தல் இலக்கம் 01/2021)

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 7.

பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர்,— மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல் (இல. 2),— காலத்திற்குக் காலம் திருத்தப்பட்டவாறான (52 ஆம் அத்தியாயமான) மதுவரிக் கட்டளைச் சட்டத்தின், 32 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அதே சட்டத்தின் 25 ஆம் பிரிவின் கீழ் வருடாந்த மதுபான உரிமக் கட்டணங்கள் தொடர்பில் நிதி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2021 சனவரி 01 ஆந் திகதிய 2208/35 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2021.04.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான அறிவித்தல் அங்கீகரிக்கப்படுமாக.

(மதுவரி அறிவித்தல் இலக்கம் 02/2021)

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 8.

பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர்,— இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் திருத்தப்பட்டவாறான, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் 4(1), 6 மற்றும் 14 ஆம் பிரிவுகளுடனும் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ், நிதி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2021 பெப்ரவரி 11 ஆம் திகதிய 2214/56 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2021.04.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 9.

தேருநர்களைப் பதிவுசெய்தல் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 10.

வர்த்தக அமைச்சர்,— இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் கட்டளை,— 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் 14(1) ஆம் பிரிவின் கீழ் செஸ் வரி அறவீடு தொடர்பில் வர்த்தக அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2021 சனவரி 12 ஆம் திகதிய 2210/9 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2021.03.24 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 11.

நீதி அமைச்சர்,— குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை,— 2013 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 7(2) ஆம் பிரிவின் கீழ் நீதி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2020 திசெம்பர் 23 ஆம் திகதிய 2207/6 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2021.03.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

* 12.

சேர்பெறுமதி வரி (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 13.

வேலையாளர்களின் தேசிய குறைந்தபட்ச வேதனம் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 14.

குற்றவியல் நடவடிக்கைமுறை சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 15.

உண்ணாட்டரசிறை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 16.

கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழு சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 17.

இலங்கை காணி அபிவிருத்தி கூட்டுத்தாபனம் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 18.

ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவலை தேசிய பாதுகாப்புப் பல்கலைக்கழகச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

# எழுத்துமூல விடைக்கான வினாக்கள்

1.

1354/2020

கௌரவ அநுர திசாநாயக்க,— பிரதம அமைச்சரும், நிதி அமைச்சரும், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரும், நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) பிரதமர் செயலகத்திலும் பிரதமரின் தனிப்பட்ட பணியாட்டொகுதியிலும் பணியாற்றும் ஊழியர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி ஊழியர்களின் எண்ணிக்கை நிறைவேற்று மற்றும் ஏனைய தரங்களுக்கு அமைவாக எத்தனை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு ஊழியருக்கும் வழங்கப்படும் சம்பளங்கள், கொடுப்பனவு மற்றும் ஏனைய சிறப்புரிமைகள் யாவை என்பதையும்;

அவர் வெவ்வேறாக இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2.

1355/2020

கௌரவ அநுர திசாநாயக்க,— பிரதம அமைச்சரும், நிதி அமைச்சரும், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரும், நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) சனாதிபதி செயலகத்திலும் சனாதிபதியின் தனிப்பட்ட பணியாட்டொகுதியிலும் பணியாற்றும் ஊழியர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி ஊழியர்களின் எண்ணிக்கை நிறைவேற்று மற்றும் ஏனைய தரங்களுக்கு அமைவாக எத்தனை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு ஊழியருக்கும் வழங்கப்படும் சம்பளங்கள், கொடுப்பனவு மற்றும் ஏனைய சிறப்புரிமைகள் யாவை என்பதையும்;

அவர் வெவ்வேறாக இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3.

1388/2021

கௌரவ புத்திக பத்திறண,— பிரதம அமைச்சரும் நிதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) மதுவரிக் கட்டளைச் சட்டத்திற்கு அமைவாக தென்னங் கள்ளு என அறியப்படுவது யாதென்பதையும்;

(ii) தென்னங்கள்ளு தொடர்பாக ஏதேனும் தரநிர்ணயம் உள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், அத்தரநிர்ணயம் யாதென்பதையும்;

(iv) கள்ளு (*மஹ ரா*) என அறியப்படுவது யாதென்பதையும் ;

(v) கள்ளுக்கான தரநிர்ணயம் யாதென்பதையும்;

(vi) கள்ளு மற்றும் கள்ளு (*மஹ ரா*) என்பவற்றின் தரத்தினை இனங்காணும் முறையியல் யாதென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) பதனீர் மற்றும் கள்ளு என்பவற்றின் தரத்தினை உறுதிப்படுத்தும் பொறுப்பு எந்த நிறுவனத்திற்கு வழங்கப்பட்டிருக்கின்றது என்பதையும்;

(ii) பதனீர் மற்றும் கள்ளு என்பவற்றின் தரமானது எந்த முறையியலின் அடிப்படையில் உறுதிப்படுத்தப்படுகின்றது என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

4.

1390/2021

கௌரவ புத்திக பத்திறண,— பிரதம அமைச்சரும், நிதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) மதுசாரம் மற்றும் வினாகிரி தயாரிப்பின் போது கையடக்கத் தொலைபேசி பட்டரிகள், யூரியா, முள்ளுக்கம்பி மற்றும் அமோனியா போன்றவை பயன்படுத்தப்படுவது அல்லது கலக்கப்படுவது தொடர்பில் அறியக்கிடைத்துள்ளதா என்பதையும்;

(ii) 2018, 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் மேற்கூறப்பட்டுள்ளவாறு பதிவாகியுள்ள தகவல்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள பொருட்களைப் பயன்படுத்துவதன் மூலம் அல்லது கலப்பதன் மூலம் தயாரிக்கப்படும் கள்ளின் காரணமாக அரசாங்கத்திற்குக் கிடைக்க வேண்டிய வரி வருமானம் இழக்கப்படுகின்றதா என்பதையும்;

(iv) ஆமெனில், வரி வருமானம் இழக்கப்படும் விதம் யாதென்பதையும்;

(v) மேற்படி (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள பொருட்களைப் பயன்படுத்துவதன் மூலம் அல்லது கலப்பதன் மூலம் தயாரிக்கப்படும் கள்ளை அடையாளம் காண்பதற்கான வழிமுறை ஏதும் உள்ளதாவென்பதையும்;

(vi) ஆமெனில், அவ்வழிமுறை யாதென்பதையும்;

(vii) மேற்படி (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள பொருட்களைப் பயன்படுத்துவதன் மூலம் அல்லது கலப்பதன் மூலம் தயாரிக்கப்படும் கள்ளு என்ன பெயர் கொண்டு அழைக்கப்படுகின்றது என்பதையும்;

(viii) வெளி மூலப்பொருட்களை கள்ளுடன் கலப்பதற்கான நோக்கம் யாதென்பதையும்;

(ix) வெளி மூலப்பொருட்களைக் கொண்டு தயாரிக்கப்படுகின்ற கள்ளு எதற்காகப் பயன்படுத்தப்படுகின்றது என்பதையும்;

அவர் இச்சபையில் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) வினாகிரி மற்றும் மதுசாரம் தயாரிப்பதற்குப் பயன்படுத்தப்படும் கள்ளின் தரம் எவ்வாறு அளவீடு செய்யப்படுகின்றது என்பதையும்;

(ii) அவ்வாறு தரத்தினை அளவீடு செய்யும் சந்தர்ப்பங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

5.

1391/2021

கௌரவ புத்திக பத்திறண,— பிரதம அமைச்சரும் நிதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் —

(i) கள்ளு சேகரிப்பதற்கான அனுமதிப்பத்திரம் கொண்டுள்ளோரால் சேகரிக்கப்பட்ட மொத்தக் கள்ளின் அளவு;

(ii) அனுமதிப்பத்திரம் கொண்டுள்ள ஒவ்வொரு நபரால் சேகரிக்கப்பட்ட கள்ளின் அளவு;

(iii) அனுமதிப்பத்திரம் கொண்டுள்ள ஒவ்வொரு நபரால் சேகரிக்கப்பட்ட கள்ளு வழங்கப்பட்டுள்ள தரப்பு;

(iv) வழங்கப்பட்டுள்ள அளவு;

என்பன வெவ்வேறாக யாவையென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) கள்ளு சேகரிப்பாளர்களால் சேகரிக்கப்பட்ட கள்ளினை அவர்களது உடைமையில் வைத்திருக்கக்கூடிய காலப்பகுதி சட்டரீதியாகவும் தொழில்நுட்ப ரீதியாகவும் வெவ்வேறாக யாதென்பதையும் அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) கள்ளுச் சீவுதல் தொடர்பான அனுமதிப்பத்திர முறையை இல்லாதொழிப்பதன் மூலம் கள்ளு ஒழுங்குபடுத்தும் செயன்முறைக்கு பாதிப்பு ஏற்படுகின்றதா;

(ii) ஆமெனில், அது எவ்வகையில் ஏற்படுகின்றது;

(iii) சீனி, யூரியா, அமோனியா, கையடக்கத் தொலைபேசி பட்டரி, முள்ளுக் கம்பி போன்ற பிற பொருட்களைப் பயன்படுத்துவதன் மூலம் அல்லது கலப்பதன் மூலம் மேற்கொள்ளப்படும் கள்ளு உற்பத்தியை குறைப்பதற்காக மதுவரித் திணைக்களம் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை;

(iv) கள்ளு தொடர்பில் தரநிர்ணய முறையொன்று காணப்படாமையினால் நீதிமன்ற நடவடிக்கைகள் மற்றும் அரச கடமைகளின்போது தரமற்ற கள்ளை அடையாளங்காணும் விதம் யாது;

என்பதையும் அவர் மேலும் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

6.

1419/2021

கௌரவ அநுர திசாநாயக்க,— பிரதம அமைச்சரும் நிதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இன்றளவில் அரசாங்கத்தினால் செலுத்தப்பட வேண்டியுள்ள மொத்த வெளி நாட்டுப் படுகடன் தொகையானது அமெரிக்க டொலர்களில் எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி கடனுக்காக செலுத்த வேண்டியுள்ள கடன் மற்றும் வட்டி தவணைத் தொகையானது ஒவ்வொரு வருட ரீதியில் வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி வெளிநாட்டுக் கடன் பெறப்பட்ட வருடம், பெறப்பட்ட மொத்தத் தொகை, மீள் செலுத்தப்பட்டுள்ள தொகை, செலுத்தப்பட வேண்டியுள்ள தொகை, கடனை முழுமையாக செலுத்தி முடிப்பதற்குள்ள வருடங்களின் எண்ணிக்கை என்பவை கடன் பெற்ற ஒவ்வொரு கருத்திட்டத்தின் அடிப்படையில் வெவ்வேறாக யாவையென்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) அரச சார்பற்ற துறைகள் பெற்றுள்ள இன்றளவில் செலுத்த வேண்டியுள்ள மொத்த வெளிநாட்டுக் கடன் தொகையானது அமெரிக்க டொலர்களில் எவ்வளவு என்பதனை அவர் மேலும் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

7.

1433/2021

கௌரவ புத்திக பத்திறண,— பிரதம அமைச்சரும் நிதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) கள்ளு கைத்தொழிலுக்காக வழங்கப்படும் உரிமப்பத்திர வகைகள் மற்றும் உரிமம் பெற்றவர்களின் பெயர்கள் என்பன யாவை என்பதையும்;

(ii) கள்ளு சேகரிப்பதற்காக உரிமம் பெற்றுள்ளவர்களின் பெயர்கள் என்ன என்பதையும்;

(iii) அவர்களுள் 2020.12.31 திகதியில் தொழிலில் ஈடுபடுகின்ற மற்றும் தொழிலில் ஈடுபடாத உரிமப் பத்திரம் கொண்டுள்ளவர்களின் பெயர்கள், முகவரிகள் மற்றும் தொலைபேசி இலக்கங்கள் என்பன வெவ்வேறாக யாவை என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) வினாகிரி தயாரிப்பிற்கு உரிமம் பெற்றுள்ளவர்களின் பெயர்கள் என்ன என்பதையும்;

(ii) அவர்களுள் 2020.12.31 திகதியில் தொழிலில் ஈடுபடுகின்ற மற்றும் தொழிலில் ஈடுபடாத உரிமப் பத்திரம் கொண்டுள்ளவர்களில் பெயர்கள், முகவரிகள் மற்றும் தொலைபேசி இலக்கங்கள் என்பன வெவ்வேறாக யாவை என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) கள்ளு சேகரிப்பதற்கு அல்லது வினாகிரி தயாரிப்பதற்கு வழங்கப்படும் உரிமத்திற்கு அமைவாக —

(i) உடைமையில் வைத்திருக்கக் கூடிய கள்ளின் அளவை தீர்மானிக்கும் முறையியல் யாதென்பதையும்;

(ii) உடைமையில் வைத்திருக்கக் கூடிய கள்ளின் அளவு வெவ்வேறாக யாதென்பதையும்;

அவர் மேலும் குறிப்பிடுவாரா?

(ஈ) உடைமையில் வைத்திருக்கக் கூடிய கள்ளின் அளவானது கள்ளு சீவுவதற்கு மரங்களுக்கு வழங்கப்படும் உரிமத்தின் அடிப்படையில் தீர்மானிக்கப்படுகின்றதா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?